DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் செவ்வாய்கிழமை 15 ம் நாள் சாட்சியாகிய ரமேஷ் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10 வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ் | வயது | 40 |
| த/பெ. | ஆறுமுகம் | இனம் | ஆண் |
| கிராமம் | மின்னல் | தொழில் | கூலி வேலை |
| சமயம் | | தாலூக்கா | |

C.C.136/2018

( எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

<u>முதல் விசாரணை 15.04.2025 அ.சா.4</u>

1. நான் தற்போது மின்னல் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கோரிக்கை செய்யப்பட்டு பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

<u>குறுக்கு விசாரணை அரசு தரப்பில்–</u>

2. 17.08.2018 ம் தேதி காலை 6 மணிக்கு அரக்கோணம் கிராமிய காவல் நிலைய குற்ற எண்.305/2018 வழக்கில் உதவி ஆய்வாளர் என் முன்னிலையிலும், சாந்தகுமார் என்பவர் முன்னிலையிலும் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் இல்லை.

3. போலீஸ் விசாரணையில் சாட்சியாக பார்வைமகஜரில் சாட்சி கையொப்பம் போட்டதாக தெரிவித்து விட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. எனக்கு வழக்கு பற்றி தெரியாது என்றால் சரிதான். போலீசார் அழைத்ததால் நீதிமன்றம் வந்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை** : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.